**C.C.No 68/2016**

**Date 24.05.2022**

**அ.சா. 37 கோமதி க/பெ.சிவராம் ( காவல் ஆய்வாளர்)**

**CMP No.4014/2019 மனுவானது 18.10.2019 அன்று அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.37 திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் எந்த தேதியில் பெற்றேன் என்றால் 26.08.2015 ந் தேதி பெற்றேன். நான் புகாரை நேரடியாக பெற்றேனா என்றால் தபால் மூலம் பெற்றேன். கூட்டுறவு சொசைட்டியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது எனில் பொதுவாக பிரிவு 81ன் படி விசாரணை செய்வது அவசியம் என்றால் சரிதான். மேற்படி 81 விசாரணையை 90 நாட்களுக்குள் செய்யவேண்டும் என்றால் சரிதான், ஆனால் அதற்கு விதிவிலக்கு உண்டு. மேற்படி விசாணையை 90 நாட்களுக்குள் முடிக்கவில்லை என்றால் கால நீட்டிப்பு துணை பதிவாளர் கூட்டுறவு பதிவாளர் அவர்களிடம் கேட்டு பெறவேண்டும் என்றால் சரிதான். என் விசாரணையில் பிரிவு 81 விசாரணையை எப்போது ஆரம்பித்து எப்போது முடித்தார்கள் என்றால் என்னுடைய புலன் விசாரணையில் அது தேவையில்லை என்பதால் நான் தெரிந்து கொள்ளவில்லை. என் விசாரணையில் பிரிவு 81 விசாரணை 90 நாட்களுக்குள் முடிக்கப்பட்டதா இல்லையா என்பதை நான் பார்க்கவேண்டும் என்றால் அது கட்டாயம் இல்லை என்பதால் நான் பார்க்கவில்லை. மேற்படி எதிரிகள் மீது எதன் அடிப்படையில் நான் வழக்கு பதிவு செய்தேன் என்றால் கூட்டுறவு துணை பதிவாளர் அவர்களின் புகாரின் பேரிலும் பிரிவு 81ன் விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின் அடிப்படையிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் பரிசீலனை அடிப்படையிலும் மேற்படி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு 81 விசாரணையை எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் முடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், 28.01.2014 அன்று ஆரம்பிக்கப்பட்டு 06.08.2014 அன்று முடிக்கப்பட்டது. பிரிவு 81 விசாரணையானது 28.01.2014 ல் ஆரம்பித்து 27.07.2014 அன்றுதான் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, விசாரணை அதிகாரி அவரது விசாரணையை முடித்து 06.08.2014 அன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி விசாரணையை 28.01.2014 ல் ஆரம்பித்து 27.07.2014 அன்றுதான் முடிக்கப்பட்டது என்றும் ஏறக்குறைய 120 நாட்கள் காலதாமதமாக விசாரிக்கப்பட்டுள்ளது என்றும் அது பிரிவு 81ன் கீழ் முறையான விசாரணை கிடையாது என்றால் சரியல்ல, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்படி பிரிவு 81 விசாரணை அதிகாரிக்கு காலநீட்டிப்பு பெற அதிகாரம் உள்ளது என்பதன் அடிப்படையில் அவருடைய உயர் அதிகாரியிடம் கால நீட்டிப்பு பெற்று அவரது விசாரணையை முடித்து விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தார். 1ம்

எதிரி அதியமான் நெடுமான் அஞ்சி என்பவர் கையாடல் செய்ததாக கூறப்பட்டுள்ளது, அந்த கையாடல் தொகை எவ்வளவு என்றால் ரூ.2,53,539 /- ஆகும். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதி என்ன என்றால் 26.08.2015 ந் தேதி ஆகும். 1ம் எதிரி அதியமான்நெடுமான் அஞ்சி 09.12.2013 ந் தேதி ரூ.50,000/- கட்டிஉள்ளார், 16.12.2013 ந்தேதி ரூ.2,50,000/- கட்டிஉள்ளார், 12.04.2013 ந் தேதி ரூ76,200/- கட்டிஉள்ளார், ஆக மொத்தம் அவர் கட்டி உள்ள தொகை ரூ.3,76,200/- என்றால் நான் புகார் பெறுவதற்கு முன்பாகவே அவர் கையாடல் செய்த தொகை மற்றும் வட்டி ஆகியவற்றை அவர் கையாடல் செய்தததை ஒப்புக்கொண்டு தொகை முழுவதையும் சங்கத்திற்கு திருப்பி செலுத்திய விவரத்தை நான் என்னுடைய புலன்விசாரணையில் தெரிந்து கொண்டேன். அவர் கையாடல் செய்ததாக சொல்லப்படும் தொகைக்கு அதிகமாக ரூ.1,22,661/- கட்டி உள்ளார் என்ற விவரத்தை என் புலன் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், அது அசலுக்கும் வட்டிக்குமான தொகை ஆகும். 1ம்எதிரி 2013 ல் அவர் கையாடல் செய்ததாக சொல்லப்படும் தொகையை கட்டிவிட்டார் என்று தெரிந்திருந்தும் 2015 ல் அவர் மீது ஏன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அவர் குற்றம் செய்தது உண்மை என்று தெரியவந்ததால் சங்கத்திற்கு இழப்பு இல்லை என்ற போதிலும், துணை பதிவாளர் அவர்களின் புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 1ம் எதிரி உண்மையிலேயே கையாடல் செய்திருந்தால் 2013லேயே குறிப்பிட்டுள்ள காலத்தில் பிரிவு 81 விசாரணை முடித்து எதிரி மீது வழக்கு தொடர்ந்திருப்போம், அவ்வாறு இல்லாததால் தான் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து ரூ. 1,22,661/- கூடுதலாக வசூல் செய்தும் 2013ல் குற்றம் நடந்ததாக சொல்லப்படும் வழக்கிற்கு 2015 வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் துறை ரீதியான நடவடிக்கைக்கும் துறை ரீதியான விசாரணைக்கும் ஏற்பட்ட காலதாமதத்தால் 2015 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1ம்எதிரி மற்றும் 4ம் எதிரிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே இருந்த காழ்புணர்ச்சியின் காரணமாக ஒரு பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க தலைவரின் நிர்வாக அதிகாரத்திற்கு உட்பட்டு தான் செயலாளர், பொருளாளர் மற்ற அலுவலர்கள் நடக்க வேண்டும் என்றால் பிரிவு 36ன் கீழ் வரையறுக்கப்பட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்படுவார்கள். ஒருவருக்கு லோன் கொடுக்க வேண்டும் என்றால் அதற்கான காசோலை கொடுப்பதற்காகன அதிகாரம் தலைவர் மற்றும் செயலாளருக்கான கூட்டுபொறுப்பு என்றால் சரிதான். அதேபோல் காசோலையில் முதலில் தலைவரும் அதன்பிறகு தான் செயலாளரும் கையொப்பம் செய்யவேண்டும் என்றால் யார் வேண்டுமானலும் முதலில் கையொப்பம் செய்யலாம், அது அவர்களது நிர்வாக பொறுப்பு ஆகும், ஆனால் இருவரின் கையொப்பமும் காசோலையில் இருந்தால் தான் அது செல்லுபடியாகும். முக்கியமான கணக்கு புத்தகத்தில் தலைவர் கையொப்பம் செய்தபிறகு தான் செயலாளர் கையொப்பம் செய்வார் என்றால் குற்ற இனம் 1

முதல் 17 வரையிலான குற்ற இனத்தில் 17 வது குற்ற இனத்தில் காசோலையில் மட்டும தான் தலைவர் கையொப்பம் இட்டுள்ளார், மீதமுள்ள 16 குற்ற இனங்களிலும் செயலாளர் மற்றும் அலுவலர் கையாடல் செய்துள்ளது தெரியவந்தது. உண்மையிலேயே மேற்படி சம்பவம் நடந்திருந்தால் குறித்த காலத்தில் பிரிவு 81 விசாரணை செய்திருப்பார்கள் என்றும் மேற்படி விசாரணை காலதாமதமாக முடிக்கப்பட்டதனால் பொய்யாக வழக்கு பதியப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 மற்றும் 4ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

ஓம்/ இரா.மருதசண்முகம் எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
தருமபுரி.